எனவே, இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையை நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் எனது தீர்ப்பைப் பிறகு வழங்குகிறேன்.

(இ) 'மாலை முரசு' நாளேடு மீது எழுப்பப்பட்ட பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் 'மாலை முரசு' பத்திரிக்கையின் மீது ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்துள்ளார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் பேச்சுகள் மட்டும் அந்தப் பத்திரிக்கையில் போடப்படுவதாகவும் மற்றவர்களின் பேச்சுகள் வெளியிடப்படுவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். எப்படி இது அவை உரிமை மீறல் பிரச்னையாகும் என்பது குறித்து சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னைகள் வந்ததிலிருந்து உண்மையில் இது சம்பந்தமாக நல்லதொரு முடிவை தாங்கள் கொடுத்தால் இந்த ஹௌஸில் உள்ள உறுப்பினர்களின் உரிமையை மட்டுமல்லாமல், இந்த ஹௌஸ் ப்ரொஸீடிங்க்ஸ்-ஐ பாதுகாக்கக் கூடியளவிற்கு அது உதவியாக இருக்கும். இங்கு சம்பந்தப்பட்ட 'மாலை முரசு' உட்பட எல்லாப் பத்திரிகைகளின் 'அக்ரெடிட்டட் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ்'-ம் உங்கள் அனுமதியோடு இங்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த ஹௌஸின் ப்ரொஸீடிங்க்ஸை ரிப்போர்ட் பண்ணுவதற்காக அவர்களுக்கு பெர்மிஷன் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் பத்திரிகைகளில் கொடுக்கக்கூடிய சித்திரமானது, நான் 'கார்டட்டாக' சொல்கிறேன், It must be fairly realistic picture of the proceedings of the House. ப்ரஸ்க்கு ப்ரீடம் இருக்க வேண்டியதுதான், அவர்களுக்கு உரிமை இல்லை என்று நான் சொல்லவில்லை. இங்கு 'அக்ரெடிட்டெட் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ்' வந்து உட்கார்ந்து ரிப்போர்ட் செய்யும்

1977 ஜூலை 13] [திரு. ஆர். உமாநாத்]

போது அவர்கள் Their sole job is to report in such a way that it would be fairly a reproduction of the real proceedings of the House.

அவர்கள் 'புல் டெக்ஸ்ட்' போடவேண்டுமென்று நான் சொல்ல வில்லை. அவர்கள் 'கட்' செய்யலாம், ஆட்சேபணையில்லை. feature) என்னுடைய ஸ்பீச்சை கட் செய்யலாம், இன்னொருவர் ஸ்பீச்சை ஃபீச்சர்' (feature) செய்யலாம். அது அவர்களது உரிமை. அதற்கு அவர்களுக்கு டிஸ்க்ரீஷன் இருக்கிறது. ஆனால் ஒரு ஹௌஸில் நடந்ததை, ஒரு செக்ஷன் பூராவையும் ப்ளாக் அவுட் செய்வது என்பதைப்பற்றித்தான் சொல்கிறேன். அப்படி ப்ளாக் அவுட் செய்வதன் காரணமாக அந்த பத்திரிகை மட்டுமே படிப்பவர்களுக்கு என்ன நினைப்பு ஏற்படும் என்றால், அன்று இந்த ஹௌஸ் ப்ரொஸீடிங்க்ஸில் ஒரு செக்ஷன் பங்கு எடுக்கவில்லை என்றுதான் நினைப்பார்கள், யாரை ப்ளாக் அவுட் செய்கிறார் களோ அவர்கள், அந்த செக்ஷன் விவாதத்தில் பங்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றுதான் நினைப்பார்கள், அதை படிப்பவர்கள். A distorted picture will be presented and not a fair picture will be presented. அப்படி வருவதைத்தான் அவை உரிமை மீறல் என்று நான் சொல்கிறேன்.

எட்டாம் தேதி மாலை முரசில், கவர்னர் அவர்கள் உரையின் மீது நடந்திருக்கக்கூடிய முதல் நாள் விவாதத்தில், டி.எம்.கே. மெம்பர்கள் பேச்சுக்களைப் போட்டிருக்கிறார்கள், ஆட்சேபணை யில்லை. சுப்புவின் பிரச்னை—அவர்களுக்கு க்ரீவன்ஸ் இருந்தது —இரண்டு பேஜ் புல் டெக்ஸ்ட் போட்டிருக்கிறார்கள். டி.எம்.கே. மெம்பர்கள் ஸ்பீச் முதல் பேஜில் போடப்பட்டிருக்கிறது. ராதாவின் பேச்சு கொஞ்சம் ஒரு இடத்தில் போடப்பட்டிருக் கிறது. ஆனால் அன்று பேசிய உறுப்பினர்களின் பேச்சு— ஸி.பி.எம். உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள், ஸி.பி.ஐ. உறுப் பினர்கள் பேசியிருக்கிறார்கள், ஜனதா உறுப்பினர்கள் பேசியிருக் கிறார்கள், இந்தியன் நாஷனல் காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசி யிருக்கிறார்கள்.

It is not a party affair. It relates to the protection of the House and its liberty.

அவர்கள் பேச்சுக்கள் ப்ளாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்று கூட இல்லை. அது மாலை எடிஷன் ஆனதால் 'ஏர்லியராகக் கவர்' செய்திருப்பார்களோ,

என்னவோ. ஆகவே முதலில் பேசியவர்கள் பேச்சுக்களைப் போட்டிருப்பார்களோ என்றால், ரிக்கார்டட் ப்ரொஸீடிங்ஸைப் பார்க்கிறபோது பின்னால் பேசியவர்களின் பிரசங்கங்கள் முன்னால் வந்திருக்கின்றன. முன்னால் பேசியவர்களது பேச்சுக்கள் வரவே இல்லை. எல்லாம் ப்ளாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறது. இதுமாதிரி ஒரு இஷ்யூ லோக் சபாவில் வந்தது. அது, எ.ஐ.ஆர். பற்றியும், ப்ரஸ் பற்றியும் வந்தது. அப்போது 'ஒரு ரூலிங் கொடுக்கப் பட்டது. அது, பெரிதாகப் போடுவதா, சிறிதாகப் போடுவதா, எந்த பாயின்ட்ஸைப் போடுவது என்பதில்,

"Complete black-out is a distoration of the proceedings of the House"

என்று ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 'மாலை முரசு பத்திரிகை என்று மட்டும் அல்ல—அதன் காப்பி என்னிடம் இருக்கிறது—மொத்தத்தில் இந்த குறிப்பிட்ட இஷ்யூவில் 'ஜெனரல் கைட்லைன்ஸ் பார் தி ப்ரஸ்', இந்த அஸெம்பளி ப்ரொ ஸீடிங்க்ஸ் எப்படி 'ரிப்வர்ட்' செய்யப்பட வேண்டும் என்று அவர்களது உரிமையும் பாதுகாக்கப்பட்டு, எங்களது உரிமையும் பாதுகாக்கப்பட்டு ஒரு முடிவு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஈ) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது கொண்டு வழங்குகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஈ) மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது கொண்டு வரப்பட்ட பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சுப்பு அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு அவை உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்துள்ளார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்த சில கருத்துக்கள் பேரவை கூடியிருக்கும்போது அதுபற்றி வெளியில் கூறியிருப்பது அவை உரிமை மீறலாகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். எப்படி அது அவை உரிமை மீறலாகும் என்பதுபற்றி சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.